# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வீட்டாதன உச்சவரம்பு (விசேட ஏற்பாடுகள் சட்டம்)

---

*[1988 மார்ச்சு மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1988 மார்ச்சு மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

# 1988 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வீட்டாதன உச்சவரம்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[1988 மாச்சு 24 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 15/87
1875

## வீட்டாதன உச்சவரம்பை அகற்றுவதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வீட்டாதன உச்சவரம்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வீட்டாதன உச்சவரம்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் அல்லது வேறு ஏதேனும் ஏற்பாட்டில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணானது எது எவ்வாறிருப்பினும், குடும்பமொன்றின் உறுப்பினரொருவராகவுள்ள அல்லது அவ்வாறில்லாத தனியாளொருவரினால் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவினால் சொந்தமாக வைத்திருக்கப்படக்கூடிய வீடுகளின் ஆகக்கூடிய எண்ணிக்கைபற்றி 1987 சனவரி 1 ஆம் தேதியிலிருந்து அல்லது அதன்பின்னர் வரையறையெதுவும் இருந்தலாகாதென்பதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும். வீட்டாதன உச்சவரம்பை அகற்றுதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தில் எது எவ்வாறிருப்பினும், 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின்கீழ் வீடொன்றின் வாடகைக் குடியிருப்பாளர் அல்லது அதன் வாடகைக் குடியிருப்புக்கு அடுத்துறக்கூடிய ஆளெவரும், அத்தகைய வீட்டைக் கொள்வனவு செய்வதற்காக, முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு 1987 சனவரி 1 ஆம் தேதியிலிருந்து அல்லது அதற்குப்பின்னர், உரித்துடையவராதல் ஆகாது. முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் விண்ணப்பங்கள் செய்வதற்கான உரிமைமீதான மட்டுப்பாடு.

4. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றைப் பாதித்தலோ அல்லது பாதித்துள்ளனவாகக் கருதப்படுதலோ ஆகாதென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— இச்சட்டத்தின் ஏற்பாடுகள், முதன்மைச் சட்டவாக்கத்தின் கடந்தகால நடைமுறையைப் பாதிக்காதிருத்தல்.

(அ) 1987 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முதன்மைச்சட்டவாக்கத்தின் கடந்தகால நடைமுறையை அல்லது அதன்கீழ் உரிய முறையில் செய்யப்பட்ட அல்லது செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட எதனையும் ;

(ஆ) 1987 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் புரியப்பட்ட ஏதேனும் தவறினையும், கொள்ளப்பட்ட ஏதேனும் உரிமையையும் அல்லது உறப்பட்ட ஏதேனும் பொறுப்பினையும் அல்லது தண்டத்தையும் அத்துடன்,

(இ) முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் தொடங்கப்பட்டு, 1987 சனவரி 1 ஆம் தேதியன்று முடிவுறுதிருக்கும் அல்லது பூர்த்தியாகாதிருக்கும் வழக்கு, நடவடிக்கை அல்லது காரியம் எதுவும் இவ் வழக்கு, நடவடிக்கை அல்லது காரியம், முதன்மைச் சட்டவாக்கமானது இச்சட்டத்தினால் திருத்தப்பட்டிருக்கவில்லையென்றாற் போன்று கொண்டுநடாத்தப்பட்டுப் பூர்த்தியாக்கப்படலாம்.